**இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம் - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டின் தவறுகளை சரிசெய்யும் போது அந்த ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் வெளியிட்டு எதிர்கால ரீதியில் சீராக்கப்பட வேண்டிய போதிலும், முறையே அமைச்சின் மானியம் ரூபா 10,406,175 தொகை, இழப்புக்கள் ரூபா 273,346 மற்றும் காலக் கழிவு ரூபா 1,893,257 தொகை அதன் பிரகாரம் சீராக்கம் செய்யப்படாமல் அப்பெறுமதி ஆண்டின் இறுதி திரண்ட இலாப நட்ட மீதியில் சீராக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது முன்யை ஆண்டின் சீராக்கங்களுக்காக விரிவான பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டின் தவறுகளை சரிசெய்யும் போது அந்த ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் எதிர்கால ரீதியில் சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஆலோசனை சேவை வருமானம் அமைச்சின் மானியமாக கணக்கீடு செய்யப்பட்டதை திருத்துவதற்கு முன்னைய | சரிசெய்யப்படும் என குறிப்பிடுகின்றோம். | முன்னைய ஆண்டின் சீராக்கமாக நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் சீராக்கமாக நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சீராக்கப்பட்டிருந்த ரூபா 10,406,125 தொகை மீளாய்வாண்டில் அமைச்சின் மானிய குறைவாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கப்பட்டமையின் காரணமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளில் அப்பெறுமதியால் அதிகரித்திருந்தது. | | சீராக்கம் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்க முடியாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நட்டத்தில் முறையே மூலதன மானியம் காலக்கழிவு ரூபா 127,404,158 மற்றும் மீண்டெழும் செலவினத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட மூலதன மானியம் ரூபா 57,449,328 ஆக மொத்த பெறுமதி ரூபா 184,853,486 தொகை செயற்பாட்டு காசுப்பாய்ச்சலில் சீராக்க வேண்டியிருந்த போதிலும், ரூபா 185,446,753 தொகை மூலதன மானியம் காலக்கழிவாக இலாபத்தில் சீராக்கப்பட்டமையால் ரூபா 593,267 செயற்பாட்டு காசுப்பாய்ச்சல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்யப்படும் என குறிப்பிடுகின்றோம். | காசுப்பாய்ச்சல் கூற்றுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் சரியாக சீராக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு செய்தலாக ரூபா 56,841,558 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக முன்னைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ரூபா 12,603,032 உள்ளடக்கப்பட்டிருந்தமையால், ஆதனங்கள், பொறிகள் | சரிசெய்யப்படும் என குறிப்பிடுகின்றோம். | முன்னைய ஆண்டுகளின் கொடுப்பனவுகள் மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்க முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் அப்பெறுமதியால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட் எரிபொருள் தாங்கி நிர்மாணங்களில் ரூபா 9,924,000 பெறுமதியான 06 எரிபொருள் தாங்கிகள் 2020 திசெம்பர் 28 ஆம் திகதி வரையிலும், பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த எரிபொருள் தாங்கிகளை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 9,709,000 பெறுமதியான 06 எரிபொருள் தாங்கிகளுக்குரிய தொகை நாட்குறிப்பு இலக்கம் 294 இன் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படுகின்ற எரிபொருள் தாங்கிகளை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பேருளியில் நங்கூரமிடப்பட்டுள்ள நீர்நிலை பிரிப்புக்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதி வரிசை அமைச்சினால் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட போதிலும், அந்த நிர்மாண கிரயமான ரூபா 314,162,431 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. இதனால் நடைமுறையல்லா சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நங்கூரம் இடப்பட்டுள்ள கடற்பிரிவு தளத்ததை நிர்மாணித்து பூர்த்தி செய்ததன் பின்னர் அப்பெறுமதிகளுக்குரிய அடிப்படையான ஆவணங்கள் அமைச்சின் செயற்திட்ட பிரிவின் மூலம் பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான சொத்துக்களை சரியாக கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | யாழ்ப்பாண மாவட்டத்தில் மயிலட் மீன்பிடி துறைமுகம் வடக்கு பிரதேசம் I பகுதியின் கட்டிட நிர்மாணம், மண்ணெண்ணெய் தாங்கி ஸ்தாபித்தல், பக்க சுவர்கள் நிர்மாணித்தலை உள்ளடக்கிய 08 வேலை | முயலட் மீன்பிடி துறைமுகத்தின் நிர்மாணம் பூர்த்தி செய்ததன் பின்னர் அப்பெறுமதிகளுக்குரிய அடிப்படையான ஆவணங்கள் அமைச்சின் செயற்திட்ட பிரிவின் மூலம் பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை | கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான சொத்துக்களை சரியாக கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகுதிகளுக்காக அமைச்சினால் ரூபா 107,427,407 நிர்மாண கிரயம் செலவில் 2019 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | எடுக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | மீளாய்வாண்டின் போது கடற்தொழில் மற்றும் சமுத்திர வளங்கள் திணைக்களத்தின் செயற்திட்ட கடமைகளுக்காக மணல் அகழ்வு கப்பலை ஈடுபடுத்தியதற்காக அந்த திணைக்களத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 9,653,000 வாடகை கட்டணம் மற்றும் குடா ஆழப்படுத்துதலை பரீட்சிக்கும் நடவடிக்கைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 871,560 தொகையும் மீளாய்வாண்டின் வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன், இதனால் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட நட்டம் மேற்கூறப்பட்ட அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டிற்குரிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஏ) | நியதிச்சட்ட கொடுப்பனவுகளை சரியாக கணிப்பிட்டு குறித்துரைத்த காலத்தில் செலுத்த வேண்டிய போதிலும், 2006 முதல் 2013 வரையான ஆண்டுகளில் வாழ்க்கை செலவுப்படி இன்றி ஊழியர் சேமலாப நிதியம் கணிப்பிடப்பட்டதன் காரணமாக ரூபா 85,059,367 | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நியதிச் சட்ட கொடுப்பனவுகளை சரியாக கணிப்பிட்டு குறித்துரைத்த காலத்தில் உரிய நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவை பணம் மற்றும் ரூபா 42,529,684 மிகை கட்டணச் சலுகையாக 72 மாதாந்த தவணைகளில் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், அதில் ரூபா 21,896,628 நிலுவை பணம் மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 7,118,475 மிகை கட்டணம் மாத்திரமாக இருந்ததுடன், அதன் பிரகாரம் ரூபா 63,162,739 நிலுவை பணம் மற்றும் ரூபா 35,411,209 மிகை கட்டணம் நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) | மீளாய்வாண்டின் போது பழுதுபார்க்கப்பட்ட தங்காளை மற்றும் நீர்கொழும்பு துறைமுக மேடைகளில் 02 துறைமுக மேடைகளின் பெறுமதியான ரூபா 7,735,227 மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்படாமல் உரிய துறைமுகத்தின் செலவினங்களில் சீராக்கப்பட்டிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் நட்டம் அப்பெறுமானத்தால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | துறைமுக மேடைகளின் கிரயம் மீண்டெழும் செலவினமாக கருதாமல் மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட கிரிந்த மீன்பிடி துறைமுகத்தின் உள்ளக வீதி முறைமைகளை மறுசீரமைக்கும் நடவடிக்கைளின் பெறுமதியான ரூபா 10,734,231 தொகை மூலதனமாக்குவதற்கு பதிலாக கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மீண்டெழும் செலவினத்தில் வரவு | 2021 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வீதி முறைமைகளை மூலதனமாக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்தது, | | |
| (ஓ) | மீளாய்வாண்டின் போது கொட்பி மீன்பிடி துறைமுகம் மற்றும் பிரதான அலுவலகத்தில் பயன்படுத்துவதற்காக ரூபா 500,000 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரேடியோ உரையாடல் (Wallkie Talker) 10 விடயங்கள் உபகரண கணக்கீல் வரவு வைக்காமல் அந்த துறைமுகத்தில் மீண்டெழும் செலவினத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு இலக்கம் 292 இன் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது உபகரண கணக்கில் மாற்றி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மூலதன சொத்துக்களை மீண்டெழும் செலவினமாக கருதி கணக்கீடு செய்ய முடியாது. |
| (ஔ) | மிரிஸ்ஸ, கொட்பே மற்றும் குடாவெல்ல என்ற மீன்பிடி துறைமுகங்களின் வாடகை வருமானம் பேரேட்டு கணக்கின் மீதி மற்றும் இறுதி கணக்கின் மீதிகளுக்கு இடையே ரூபா 1,116,402 வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதிலும், அந்த வேறுபாடுகளை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை வாடகைக்கு வழங்கியதற்காக கிடைக்க வேண்டிய வருமானத்திற்கு மேலதிகமாக இறுதி கணக்கு மீதிகளில் நாளாந்தம் படகுகள் தரை இறக்குவதற்காக அறவிடப்படுகின்ற பணம் வாடகை வருமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் பேரேட்டு கணக்கு மீதிகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளை கண்டறிந்து சரி செய்யல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொத்த கிரயம் ரூபா 6,679,408,834 ஆன 23 நிலையான சொத்து வகைகளுக்காக நிலையான சொத்து பதிவேடு ரூபா 945,559,937 ஆன சுனாமியால் இழப்பீட்டிற்கு உட்பட்ட சொத்துக்களுக்கான ஒதுக்கங்களுக்குரிய விரிவான பட்டோலைகள், ரூபா 9,824,409 பெறுமதியான கடன்கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய அடிப்படை மூல | ஏற்றுக்கொள்கின்றோம். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான தேவையான பட்டோலைகள், மீதி உறுதிப்படுத்தல், உடன்படிக்கை, விரிவான பட்டோலை மற்றும் |

| | | |
|---|---|---|
| ஆவணங்கள் மற்றும் பட்டோலைகளும் ரூபா 90,193,518 ஆன அமைச்சின் மானியம் மற்றும் ரூபா 835,175,606 ஆன ஏனைய மானியங்களுக்குரிய மூலதனமாக்கப்பட்ட சொத்துக்கள், மானிய உடன்படிக்கை, நிறைவேற்றப்பட்ட பணிகளின் விரிவான பட்டோலை மற்றும் மூல ஆவணங்களும், ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கிடைக்க வேண்டிய 10 வருடங்கள் வரையான ரூபா 2,150,000 இற்கான மீதி உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 83,985,365 பெறுமதியான பதிவழிக்கப்பட வேண்டிய மீதி மற்றும் ரூபா 1,653,400 ஆன பிற்போட்ட பொறுப்புக்கள், தொடர்புடைய மூல ஆவணங்களும், ரூபா 4,254,111 ஆன கணனி மென்பொருள் மற்றும் அலுவல தரையை அமைப்பதற்கான நடைமுறை வேலைக்கான கோவை, மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான விபரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் இந்த விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | | மூல ஆவணங்களும், கோவைகள் போன்ற எழுத்து மூல சான்றுகளும் கணக்காய்விற்கு வழங்கப்படல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய கணக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) ரூபா 87,895,056 ஆன வாடகை கடன்பட்டோர் மீதியில் 1-2 வருடங்கள் வரை ரூபா 25,710,618 தொகையும், 2-5 வருடங்கள் வரை ரூபா 45,295,723 தொகையும், 5-10 வருடங்கள் வரை ரூபா 16,888,714 தீர்த்து | பதிலளிக்கப்படவில்லை. | பெறவேண்டிய பணத்தை விரைவாக அறவிட்டு கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மூலதனத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்படாத மீதியுமாக இருந்ததுடன், ரூபா 84,581,542 ஆன பெறவேண்டிய 07 கடன் மீதிகளில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 60,637,315 ஆகும். | | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்குரிய சயுறி கப்பல் துறைமுக அதிகார சபையின் ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தின் அகழ்வு நடவடிக்கைகளுக்காக 2016 திசெம்பர் 16 ஆம் திகதி முதல் 2017 மார்ச் 09 ஆம் திகதி வரையும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எனினும், இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன், துறைமுக அதிகார சபையில் இருந்து கூட்டுத்தாபனத்திற்கு இது தொடர்பாக ரூபா 24,840,000 தொகை அறவிடுவதற்கு இருந்தமை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள இந்த மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | துறைமுக அதிகார சபையில் இருந்து உரிய பணத்தை அறவிடுவதற்கான பல சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. | பெற வேண்டிய பணத்தை விரைவாக அறவிட்டு கூட்டுத்தாபனத்தின் தொழிற்படு மூலதனத்தை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36,702,978 ஆன முற்கொடுப்பனவு மீதியில் ரூபா 27,056,667 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாக இருந்ததுடன், ரூபா 9,602,683 தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும். 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 15,528,683 பெறுமதியான மீதியும் | 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதி தொடர்பாக கண்டறிவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | முற்கொடுப்பனவுகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், கூட்டுத்தாபனம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் பணத்தை முறையற்ற முறையில் பயன்படுத்துவதற்கு இடமளித்துள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று |

| | | | |
|---|---|---|---|
| | முற்கொடுப்பனவவுகளில் உள்ளடக்கப்பட்ட போதும் அந்த மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பணம் இந்த முறையில் பொறுப்புக்கள் இன்றி மூன்றாம் தரப்பினருக்கு பயன்படுத்துவதற்காக இடமளித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக இதுவரையும் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடகை கடன் பட்டோர் மீதிகளுக்கு இடையே தங்காலை, குடாவெல்ல, புராணவெல்ல, கொட்பே என்ற 05 துறைமுகங்களின் மொத்த கூட்டுப்பெறுமதி ரூபா 5,321,494 ஆன 12 மீதிகள் 05 வருடங்களை விஞ்சியிருந்த போதும் இது வரையும் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்காலை - ரூபா 137,000 தொகை மீன்பிடி கூட்டுத்தாபனத்தால் இது செலுத்தப்பட்டிருக்கவில்லை. குடாவெல்ல ரூபா 928,852 தொகை குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தின் சிற்றுண்டிச்சாலை வாடகைக்கு வழங்கியதால் கிடைக்க வேண்டிய நிலுவைப் பணமாக இருந்ததுடன், இதற்காக வழங்கு தொடர்ந்து மாதாந்தம் 10,000 வீதம் துறைமுகத்திற்கு செலுத்தப்படுகின்றது. ரூபா 448,554 தொகை மீன்பிடி கூட்டுத்தாபனத்தால் இது வரை செலுத்தப்படாதிருந்தது. இது வரையில் குடாவெல்ல வாடகை கட்டிடத்தை விலகியிருந்ததமையும் அறியத்தருகின்றோம். ரூபா 364,872 புரான வெல்ல மீன்பிடி துறைமுகத்தின் எரிபொருள் தளத்தை வாடகைக்கு | நிலுவை வாடகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், நிலுவை வாடகை தொடர்பான தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குவதற்காக அறவிட வேண்டிய தொகையாக இருந்ததுடன், இது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. காலி ரூபா 520,768 தொகை மீன்பிடி கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவிடுவதற்கு உள்ள தொகையாகும். வானெலி சமிஞ்சை நிலையம் (Radio Room) இல் இருந்து அறவிட வேண்டிய ரூபா 22,515 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். கொட்பே Trincomarine நிறுவனத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 42,062 தொகையை அறவிடுவதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. Walkers நிறுனத்தில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 155,250 தொகையை அறவிடுவதற்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. ரூபா 1,379,685 தொகை கலபத்தி அவருக்குரிய வாடகைக்கு வழங்கப்பட்ட முன்னைய தினங்களில் கப்பலுக்காக வழங்கப்பட்ட எரிபொருளின் விலைகளாகும். Solid Maritine - time ரூபா 1,053,000 இந்த பணம் 2021 யூன் 23 ஆம் திகதி காசு பற்றுச் சீட்டு இலக்கம் 604272 இன் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| (உ) | வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற, ஓய்வு பெறச் செய்யப்பட்ட மற்றும் மரணமடைந்த 12 | கடன்பட்டோர் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படும். | நிலுவை ஊழியர் கடன் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| ஊழியர்களிடம் இருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,039,426 ஆன ஊழியர் கடன் மீதி அறவிடப்படாமல் நிலுவையாக காணப்பட்டது. | | வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நடைமுறைப் பொறுப்புக்களில் செலுத்த வேண்டிய மீதியாக 2014 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 10,512,971 ஆன பொருளாதார வரி மற்றும் 2020 சனவரி 01 ஆம் திகதியில் காணப்பட்ட பெறுமதி ரூபா 21,429,875 ஆன அட்டுறு செலவினம் என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மணல் வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்ட பெறுமதிசேர் வரியான ரூபா 10,434,783 தொகை பொருளாதார சேவை வரிக்கு பதிலாக ஈடுசெய்வற்காக இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி கோரப்பட்ட போதும் இது வரையும் அதற்கான அங்கீகாரம் இறைவரி திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்களை விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (ஆ) | கடன்கொடுத்தோரில் உள்ளடக்கப்பட்டுள்ள கூட்டுமொத்தமான ரூபா 112,669,731 ஆன 10 மீதிகள் 02 வருடங்களை விஞ்சியிருந்த போதும், தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் பெற்றுக்கொள்வதற்காக தனியார் கம்பனியொன்றில் இருந்து கிடைத்த ரூபா 80 மில்லியன் முற்பண தொகையில் மணல் பெற்றுக்கொள்ளப்படாத அளவிற்குரிய மீள செலுத்த வேண்டிய ரூபா 76,261,312 தொகையும் உள்ளடங்கியுள்ளது. இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2017 | கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் பெற்றுக்கொள்வதற்காக வெஸ்டன் லங்கா (தனியார்) கம்பனியால் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 8.80 மில்லியனில் மணல் வழங்குவதற்கு முடியாமையின் காரணமாக வெஸ்டர்ன் லங்கா (தனியார்) கம்பனிக்கு மீண்டும் செலுத்த வேண்டிய ரூபா 76,261,312 தொகை கடன் கொடுத்தோரில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த தொகை சட்டமா அதிபர் திணைக்களத்தால் மீண்டும் 10 தவணைகளில் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் இந்த | செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைக்க வேண்டியதுடன், மணல் வழங்காமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரனை நடாத்தப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| மார்ச் 01 ஆம் திகதிய E/11/2017/CFHC ஆம் இலக்க கடிதத்தின் படி உடன்படிக்கையின் பிரகாரம் அந்த கம்பனியால் வைப்புச் செய்யப்பட்ட பணம் மீண்டும் செலுத்துவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2022 யூன் 20 வரையிலும் அது தொடர்பாக முகாமைத்துவம் தீர்மானம் எடுத்திருக்கவில்லை. | தொகை தவணையாக செலுத்தப்படுகின்றது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 102 மற்றும் 760 | இருப்பு பேரேடு மற்றும் எரிபொருள் மெய்மெய்யாவு அறிக்கையின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 19 மீன்பிடி துறைமுகங்களுக்குரிய ரூபா 7,409,186 ஆன 67,831.86 லீட்டர் டீசல் மற்றும் 8,340.33 லீட்டர் மண்ணென்ணெய் பற்றாகுறை அவதானிக்கப்பட்ட போதிலும், அது தொடர்பாக பரிசோதனைகள மேற்கொள்ளப்பட்டிருக்கில்லை. | எரிபொருள் பௌதீக இருப்பை பரீட்சிக்கும் போது ஒவ்வொரு தடவையும் புத்தக பெறுமதியுடன் சிறு சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றது. அதாவது பௌதீக இருப்பு பரிசோதனை (Dip) கூறு முறைமையில் மேற்கொள்ளப்படுவதுடன், அதில் சிறிய அலகுகளில் வேற்பாடகளின் காரணமாக சிறு மாற்றங்கள் ஏற்பட முடியும். மேலும், காலை வேலையில் மற்றும் மாலை | எரிபொருள் பற்றாக்குறை தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேலையில் எரிபொருள் இருப்பு பரீட்சித்தலும் புத்தக பெறுமதியுடன் வேறுபாடுகளை காண முடியும். | |
| (ii) | நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | ஒரு உத்தியோகத்தருக்கு வழங்கக் கூடிய செயல் நிமித்த உப கட்டுநிதி ரூபா 100,000 ஆக இருந்த போதிலும், அந்த எல்லையை விஞ்சி 04 உத்தியோகத்தர்களுக்கு கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | உரிய பணிகளின் தன்மையை கவனத்தில் கொண்டு செலாகின்ற மொத்த கிரய்திற்காக மதிப்பீடு தயாரித்து உரிய முற்பண தொகை வழங்கப்பட்டிருந்தது. ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள சகல முற்பணமும் தற்போது தீர்க்கப்பட்டுள்ளது. | ஒரு உத்தியோகத்தர் களுக்கு ரூபா 100,000 எல்லையை விஞ்சாமல் உப கட்டுநிதி வழங்கமுடியாது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 371(5) | செயல்நிமித்த உப கட்டுநிதி விநியோகிக்கப்பட்ட உரிய பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதி தீர்த்து வைக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதியின் பெறுமதி ரூபா 4,346,531 ஆகும். | 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் மாத இறுதியில் திறைசேரி நிதி ஏற்பாடு கிடைத்தவுடன் அது வரையில் மேற்கொள்ள வேண்டியதாக காணப்பட்ட பணிகளுக்காக முற்பணம் வழங்கிதன் காரணமாக 2022 ஆம் ஆண்டின் சனவரி 01 ஆம் திகதி வரையிலும் ரூபா 4,346,531 தொகை தீர்க்கப்படாத மீதியாக காண்பிக்கப்படுகின்றது. | வழங்கப்பட்ட உப கட்டுநிதி பணி நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 395(இ) | 58 வங்கி கணக்குகளுக்குரிய வங்கி இணக்கக் கூற்று அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்தம் உரிய பிரகாரம் வங்கி இணக்கக் கூற்று தயாரிக்க்பபட்ட போதும், 2020 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோயின் காரணமாக எங்களது நிறுவனமும் அவ்வப் போது மூடப்பட்டிருந்தது. அதன் காரணமாக | வங்கி இணக்கக் கூற்றுக்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாதாந்தம் கணக்காய்விற்கு வங்கி இணக்கக் கூற்றுக்கள் சமர்ப்பிக்க முடியாதிருந்ததுடன், சகலவ வங்கி இணக்கக் கூற்று அறிக்கைகளும் ஒரே தடவையில் அனுப்பப்பட்டிருந்தது. | |
| (v) | நிதிப்பிரமாணம் 395(ஏ) | காசுப் புத்தகம் எழுதுதல், காசோலை எழுதுதல், சேகரிக்கப்படுகின்ற பணத்தை வங்கியில் வைப்புச் செய்தல், காசேட்டை பேணிச் செல்வதற்கான வேலை பகிர்ந்தளிப்பு முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் இணங்குகின்றோம். | காசேடு மற்றும் அது சார்ந்த பணிகளுக்காக வேலை பகிர்ந்தளிப்பு முறைமை பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி சட்டத்தின் 26 வது பிரிவு. | காலாண்டு ரீதியில் அல்லது மாதாந்த ரீதியில் வரி கால எல்லை முடிவடைகின்ற மாதத்தின் இறுதி திகதிக்கு முன்னர் பெறுமதிசேர் வரி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2020 சனவரி 01 இல் உள்ளவாறு பழைய மீதியுடன் ரூபா 75,647,389 ஆன பெறுமதிசேர் வரி 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி பெறுமதி சேர் வரி செலுத்த வேண்டிய வரி மாதாந்த தவணையாக செலுத்தப்படுகின்றது. | வரி சட்டத்தின் பிரகாரம் வரி கால எல்லை முடிவடைகின்ற மாதத்தின் இறுதி திகதிக்கு முன்னர் பெறுமதிசேர் சரி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 ஒக்டோபர் 22 ஆம் திகதிய இலக்கம் 05/2020 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(அ) மற்றும் (ஆ) பிரிவுகள். | ஓட்ட நிலைமையில் காணப்படாத, பழுதுபார்த்தல் சிக்கனமற்றதாக இருந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், ஓட்ட நிலைமையில் காணப்படாத இலக்கம் | இந்த இயந்திரம் கிரிந்த மீன்பிடி துறைமுகத்தில் அகலப்பட்ட மணல், லொறிகளுக்கு ஏற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டது. எனினும், இந்த இயந்திரம் பல சந்தர்ப்பங்களின் போது செயலிழந்ததுடன், இயந்திரத்தை நல்ல | உடைந்த வாகனங்கள் விற்றுத் தீர்ப்பதற்கோ அல்லது பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 4502 என்ற JCB இயந்திரத்திற்காக பொருளாதார ரீதியில் பயனுள்ள பொருளாக இனங்கண்டு விற்றுத் தீர்ப்பதற்கோ அல்லது பழுதுபார்ப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைக்கு கொண்டுவருவதற்காக அதன் போது கணிசமான கிரயத்தை செலுத்து வேண்டியிருந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்த இயந்திரம் ஏனைய துறைமுகத்திற்காகவும் தேவை இல்லாதமையால் கிரிந்த மீன்பிடி துறைமுகத்தின் மணல் விற்பனை நிறுத்தப்பட்டதன் காரணமாக அவ்வாறான கணிசமான கிரயம் ஒன்றை செய்து இந்த இயந்திரத்தை பழுதுபார்த்தல் விளைவற்ற பணியாக இருந்தமையால் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் இந்த இயந்திரத்தை விற்றுத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் நாளது வரையாக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தால் ரூபா 6,679,408,837 ஆன நிலையான சொத்துக்களுக்காக | தற்போது இது வரையான ஆண்டுகளுக்கு நிலையான சொத்து பதிவேடு நாளது வரையாக்கப்பட்டுள்ளதுடன், அது 2020 இன் பிரதியொன்று அரசாங்க கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என | நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேடு சுற்றறிக்கையின் பிரகாரம் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிலையான சொத்து பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | அறியத்தருகின்றோம். | |
| (உ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2.2(அ) பிரிவு | பெறுமதி ரூபா 6,689,000 ஆன 07 மண்ணெண்ணெய் எரிபொருள் பம்பிகள் கொள்வனவு செய்வதற்கான கேள்வி தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 திசெம்பர் 21 ஆம் திகதி தினமின மற்றும் Daily Mews செய்திப் பத்திரிகைகளில் எரிபொருள் பம்பி கொள்வனவு செய்தல் மற்றும் கூறுவிலைகள் கோருவதற்கு உரிய அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட 06 நிறுவனங்களினால் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், சரியான மாதிரிகளின் பிரகாரம் அந்த நிறுவனங்களின் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் மீண்டும் கேள்வி 2019 யூலை 11 ஆம் திகதி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அத்திகதியில் கூறுவிலை சமர்ப்பித்த 06 நிறுவனங்களில் கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் உரிய கேள்வி பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சகல கொள்வனவுகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 236,010,941 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நோரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 71,111,703 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 164,899,238 பற்றாக்குறையில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பற்றாக்குறை அதிகரிப்பிற்கு துறைமுகங்களின் செயற்பாட்டு நட்டம் 233 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

துறைமுகங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் உழைக்கப்பட்ட இலாபம்/ நட்ட நிலைமை பின்வருமாறும்,

| | மீன்பிடி துறைமுகம் | செயற்பாட்டு இலாபம் அல்லது நட்டம் ரூபா. 2020 | 2019 | குறைவு மற்றும் அதிகரித்தலின் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பேருவளை | 764,410 | 1,873,194 | (59) |
| 2. | காலி | (3,084,949) | (10,686,069) | 71 |
| 3. | மிரிஸ்ஸ | 1,878,008 | 7,237,363 | (74) |
| 4. | புராணவெல்ல | (7,496,629) | (8,189,577) | 8 |
| 5. | தங்காலை | (43,142,804) | (39,310,703) | (10) |
| 6. | கிரிந்த | (25,615,510) | (16,720,969) | (53) |
| 7. | கொட்பே | (5,750,505) | (37,645) | (15,176) |
| 8. | தொடந்துவ | (11,884,864) | (11,601,386) | (2) |
| 9. | ஹிக்கடுவ | (15,386,764) | (11,892,984) | (29) |
| 10. | கற்பிட்டி | (3,794,502) | (9,025,468) | 58 |
| 11. | குடாவெல்ல | 7,352,427 | 7,672,889 | (4) |
| 12. | பாணந்துறை | (14,475,168) | (12,315,480) | (18) |
| 13. | நீர்கொழும்பு | (12,218,701) | (6,040,409) | (102) |
| 14. | அம்பாந்தோட்டை | (26,012,473) | (22,898,194) | (14) |
| 15. | அம்பலாங்கொடை | (5,966,434) | (11,220,653) | 47 |
| 16. | சிலாபம் | (12,567,229) | (13,036,201) | 4 |
| 17. | வாழைச்சேனை | (17,312,954) | (17,388,158) | 0 |
| 18. | நில்வெல்ல | (6,416,508) | (3,241,308) | (98) |
| 19. | திக்ஓவிட்ட | 119,213,816 | 170,622,402 | (30) |
| 20. | சுதுவெல்ல | (12,429,764) | (10,035,988) | (24) |
| 21. | மயிலட் | (9,651,469) | (17,499,801) | 45 |
| 22. | கலமெட்டிய (2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது) | (8,176,856) | இல்லை | இல்லை |

(அ) கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது எரிபொருள் வருமானம் அதிகரித்தமையால் சில துறைமுகங்களில் சாதகமான நிலைமை வெளிப்படுத்தப்பட்டது. எனினும், 22 மீன்பிடி துறைமுகங்களில் 18 மீன்பிடி துறைமுகங்கள் மீளாய்வாண்டில் ரூபா 112,175,422 நட்டம் பெறப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டின் போதும் ரூபா 33,735,144 நட்டம் காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 78,440,278 இனால் நட்டம் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பேருவளை வேலை பிரிவில் ரூபா 26,649,965 நட்டம் பெறப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டில் ரூபா 24,735,590 ஆக இருந்ததுடன், ரூபா 1,914,366 இனால் நட்ட நிலைமை அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 3.1:1 | 3:1 | 2.8:1 |
| விரைவுச் சொத்து விகிதம் | 2.7: 1 | 2.67: 1 | 2.5: 1 |
| மொத்த இலாப விகிதம் | 1.46% | (10.02%) | (43%) |

(அ) 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த இலாப விகிதம் 1.46 சதவீதமாக இருந்ததுடன், 2019 ஆம் ஆண்டிற்கு உரிய அது மறை 10.02 வீதமாகும். மீளாய்வாண்டின் போது நட்ட அதிகரித்தமையின் காரணமாக அந்த சதவீதம் மறை 43 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நடைமுறைச் சொத்து விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதங்களில் வீழ்ச்சியை காணக்கூடியதாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குடாவெல்ல மீன்பிடி துறைமுக வளவில் 15.12 பேர்ச் காணி பனிக்கட்டி (ஐஸ்) உற்பத்தி கூடமொன்றிற்காக 2019 நவம்பர் 07 ஆம் திகதி மாதாந்த வாடகை ரூபா 115,000 வீதம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட திகதி 2020 யூன் 11 வரை தாமதிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான 2021 ஏப்ரல் 27 வரையும் பணிக் கட்டி உற்பத்தி கூடத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், வாடகை செலுத்துதல் ஒரு வருடத்தை விஞ்சியிருந்த போதிலும், எந்தவொரு வாடகை வருமானமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட் திகதியான 2020 யூன் 11 ஆம் திகதி முதல் 2020 | பாகங்களை கையளிக்கும் போது சில முறைகேடுகள் ஏற்பட்டிருந்தமை முறைப்பாடுகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டமையால் அது தொடர்பாக விசாரனையொன்று மேற்கொண்டு இறுதி வரையிலும் எதிர்பார்த்திருந்தமையால் தாமதமடைந்திருந்தது. பின்னர் அமைச்சினால் தலைவருக்கும் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் 2020 யூன் 11 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கோரோன தொற்று நோயின் காரணமாக வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையை காணபித்து வாடகைக்கு பெற்றவர்களினால் சலுகை கோரப்படடிருந்ததுடன், அது தொடர்பாக 2021 திசெபம்ர் 07 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் | வாடகையாளரினால் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருக்குமாயின் ஏனையவருக்கு வாடகைக்கு வழங்கி வருமானத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செம்பர் 31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனத்திற்கு 06 மாதங்களில் ரூபா 690,000 ஆன வாடகை வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சபையொன்று பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் போதியளவில் இல்லாமையினால் எதிர்வரும் தினத்தில் நடாத்துவதற்கு பணிப்பாளர் சபை பத்திரம், சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்வரும் பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தீர்மானம் அறிவிக்கப்படும். | |
| (ஆ) | 2020 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு பேரேட்டின் பிரகாரம் மீன்பிடி கிரிசவிய கணக்குக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 8,610,910 பெறுமதி அந்த செயற்திட்டதிற்காக பயன்படுத்தப்பாதிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்தது. | மீன்பிடி குடும்பங்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற நலன் புரி செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடாக இருந்ததுடன், மீன்பிடி குடும்பங்கள் தொடர்பில் நலன்புரி நடவடிக்கைகள் திருத்தப்பட்டமையால் திரிசவிய ஒதுக்கீட்டு கணக்கில் மீதி காணப்படுகின்றது. | நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் அதற்குரிய பணிகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வங்கி மீதி வங்கி இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் வங்கி மீதிகளுக்கு இடையே 09 வங்கி கணக்குகளுக்கு உரியதாக ரூபா 12,770,988 வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் பிரகாரம் வங்கி மீதி மற்றும் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் வங்கி மீதிகளின் வேறுபாட்டிற்காக 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது நாட்குறிப்பை பயன்படுத்தி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வங்கி இணக்கக் கூற்று சரியாக தயாரிக்க வேண்டியிருந்ததுடன், வேறுபாடுகள் காணப்படுமாயின் அது தொடர்பாக கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011 யூன் மாதம் முதல் அம்பலாங்கொடை மீன்பிடி | எங்களால் வாடகையாளருக்கு | வாடகை ஆதனங்களுக்காக |

| | | |
|---|---|---|
| துறைமுகத்தில் 40 பேர்ச் ரூபா 225,000 (வற் உடன்) மாதாந்த வாடகை தவணைப் பெறுமதியில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 08 வருடங்களுக்கு பிறகு ஆண்டின் அரசாங்க மதிப்பீட்டு அறிக்கை அல்லது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2019 செப்டம்பர் முதல் முன்னைய வரி வாடகையாளர் நிறுவனத்தின் கோரிக்கையின் அடிப்படையில் ரூபா 105,000 (வற் உடன்) பெறுமதிக்கு மீண்டும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | வாடகைக்கு வழங்கப்பட்ட 40 பேர்ச் வெற்று காணி மாத்திரமாக இருந்ததுடன், உரிய நிறுவனத்தால் பணிக் கட்டி கூடத்தை நிர்மாணித்து பொறிமுறைகள் அவர்களால் பொருத்தப்பட்டிருந்தது. இந்த நிறுவனத்திற்கு உள்ளக மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், தற்போது அரசாங்கத்தின் மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் அரசாங்கத்தின் மதிப்பீடு உள்ளக மதிப்பீட்டினை விட அதிகரிக்குமாயின் அந்த அதிகரித்த பணத்தை பெற்றுக் கொள்வதற்கு கையளித்தல் கடித்தின் திகதியில் இருந்து அறவிட முடியுமான வகையில் தேவையான நிபந்தனைகள் உடன்படிக்கைகளில் இடப்பட்டுள்ளதையும் அறியத்தருகின்றோம். | வாடகைப் பணம் அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடுவதற்கோ அல்லது திறந்த கேள்வி நடைமுறைகைளை பின்பற்றி புதிய வாடகையாளரை கண்டறிவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தில் 2017 ஏப்ரல் 11 ஆம் திகதி எல்லை அடையாளப்படுத்தப்படாமல் வாடகையாளருக்கு மாதாந்தம் ரூபா 70,000 ஏயுவு உடனான பெறுமதியில் வாடகைக்கு வழங்கப்பட்ட லொட் y இன் 37.11 பேர்சசுக்கு மேலதிகமாக 5.11 பேர்ச் நில பகுதியையும் உரிமை கோரப்பட்டிருந்ததுடன், | 2017 ஆம் ஆண்டில் உரிய வாடகையாளருக்கு இந்த நிலத்தை வாடகைக்கு வழங்கும் போது பழைய நில வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமையும், பின்னர் இந்த நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட நிலத்தின் அளவினை விட அதிகரித்த நில அளவொன்று | உரிமை கோராடப்பட்ட நில பகுதிக்காக புதிய வாடகை உடன்படிக்கையின் கீழ் வாடகை அறவிடுவதற்கோ அல்லது கையேற்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்த மேலதிக நிலப் பகுதிக்காக மேலதிக உடன்படிக்கையின் கீழ் தனியான வாடகை அறவிடுவதற்கோ அல்லது அனுமதியற்ற வகையில் உரிமை கோருகின்ற பகுதியை துறைமுக முகாமைத்துவதற்கு கையேற்பதற்கு எந்தவொரு நடவடிக்கைளும் கையேற்பதற்கோ எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாடகையாளருக்கு உரிமை கோருகின்றமையும் எமது நிறுவனத்தால் அவதானிக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் உரிய நிலவை அளவிடுவதற்கு நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அந்த அளவீடுகளின் போது மேலதிகமாக 5.11 பேர்ச் வாடகையாளர் உரிமை கோரியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டமையால் அந்த மேலதிக நில அளவிற்காக உள்ளக மதிப்பீடு மேற்கொண்டு அதன் மேலதிக உரிமை கோருகின்ற ஆதனங்களுக்காக 2021 திசெம்பர் 07 ஆம் திகதி உரிய வாடகையாளருக்கு கையளித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | மேற்கூறப்பட்ட குடாவெல்ல மீன்பிடி துறைமுகத்தை வாடகைக்கு வழங்கும் போது 2017 யூன் 30 திருத்தப்பட் வாடகை கையளித்தல் கடிதத்தின் படி மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நிலையத்தை ஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் பணிக் கட்டி இயந்திர கூடமொன்றாக மாற்றுவதற்காக ஒரு வருட சலுகை வாடகை கால எல்லை வழங்கப்பட்டதன் பின்னர் 2018 ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் மாதாந்தம் ரூபா 70,000 வாடகையில் 20 வருட காலத்திற்காக 37.11 பேர்ச் மேற்கூறப்பட் நில அளலை உள்ளடக்கிய கட்டணம் கேள்வி நடைமுறைகைளை பின்பற்றாது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அரசாங்க மதிப்பீட்டின் | இந்த கட்டிடத்தை வாடகைக்கு வழங்கல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையை கவனத்தில் கொண்டு பெறுகை குழுவிற்கு அனுப்பப்பட்டு அதன் பரிந்துரையின் அடிப்படையில் கையளிக்கப்பட்டிருந்தது. | அரசாங்க மதிப்பீட்டு பெறுமதியில் காணி வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் 2019 நவம்பர் 07 ஆம் திகதி பணிக் கட்டி உற்பத்தி நிறுவனத்திற்கு 25 வருட கால எல்லையில் 15.12 பேர்ச் அளவு SSP 327 நில வரைபடத்தில் லொட் (X) பணிக் கட்டி உற்பத்தி கூடத்திற்காக ரூபா 115,000 வாடகையின் கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், இந்த இரண்டு சந்தர்ப்பங்களிம் திறந்த கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | பேருளிய மீன்பிடி துறைமுகத்தில் மணல அகற்றுவதற்காக தேவையான இயந்திரம் காணப்படும் போது 20,581 மணல் கியுப்களை அகற்றுவதற்காக 03 வருடங்களுக்கு தனியார் கம்பனிக்கு 2018 ஒக்டோபர் 23 ஆம் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தகாரருடன் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அகற்றப்பட வேண்டிய மொத்த மணல் அளவு 20,581 மணல் கியுப்களாக இருந்த போதிலும், 2018 ஒக்டோபர் 23 ஆம் திகதி முதல் 2020 ஆகஸ்ட் வரை 3,426 மணல் கியுப்கள் 16 சதவீதம் மாத்திரமே அகற்றப்பட்டிருந்ததுடன், மீன்பிடி துறைமுகத்தில் கப்பல் நுழைவதற்கு மணல் அகற்றாமையினால் துறைமுக பகுதியை பராதரித்தல் கூட்டுத்தாபனத்தின் நோக்கமும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனம் ஒப்பந்த காரருடன் உரிய உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் நிபந்தனை மற்றும் பரிந்துரையின் பிரகாரம் தற்போது மீண்டும் இந்த துறைமுக பகுதியில் மணல் அகற்றுவதற்காக புதிய ஒப்பந்த கரருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன், இது வரையில் 2750 மணல் கியுப்கள் அப்பகுதியில் இருநது அகற்றப்டபட்டுள்ளது. | மணல் அகற்றும் பணிகள் வெளித்தரப்பினருக்கு கையளித்தல் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ''வெலிகொவ்வா'' கப்பலில் பழுதுபார்த்தல் கிரயம் மற்றும் தற்போதைய நிலை தொடர்பாக 2020 செப்டம்பர் 30 ஆம் திகதிய தொழில்நுட்ப அறிக்கையின் பின்னர் கப்பலை விற்றுத் தீர்ப்பதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், மேற்கூறப்பட்ட கப்பலை விற்றுத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது வரையில் கப்பல் துரப்பிடித்த நிலையிலும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்று காணப்படுகின்றமையால் மீளாய்வாண்டின் போது அந்த கப்பலை பராமரித்தல் மற்றும் பேணிச் செல்வற்காக 3,670,247 தொகை சம்பள செலவினம் செய்து பதவியணியினர் நியமிக்கப்பட்டிருந்தனர். | கணக்காய்வு ஐயவினாவில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இணங்குவதுடன், அந்த கப்பலின் பாதுகாப்பு மற்றும் கப்பல் கடலில் தாழ்வதை தடுத்துக் கொள்ளும் நோக்கில் கப்பல் துறைமுகத்தில் நங்கூரமிடல் கடலுக்கு அடியில் செல்லுமாயின் மீண்டும் கரை எடுப்பதற்காக கணிசமான கிரயமொன்றை செலவிட வேண்டி ஏற்படும். அதனால் கப்பலின் பாதுகாப்பிற்காக சில பதவி அணியினர் கப்பலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். இந்த கப்பலை விற்றுத் தீர்ப்பதற்காக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்தால் இதற்கு முன்னர் இவ்வாறான அகழ்வு கப்பல் மதிப்பீடு செய்யப்படாமையால் கப்பலை மதிப்பீடு செய்வதற்காக போதியளவான காலம் தேவையான இருந்ததாக அறிவித்திருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததன் பின்னர் கப்பலை விற்றுத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | விளைவற்ற சொத்துக்களை தாமதமின்ற விற்றுத் தீர்த்தல் வேண்டும். |
| (ஆ) | 2018/2019 ஆம் ஆண்டுகளின் போது மீன்பிடி துறைமுகத்தில் | தற்போது 05 எரிபொருள் தாங்கிகளிலும் எரிபொருள் விநியோகிக்கும் | தேவையான மின்சார வசதிகளை வழங்கி |

| | | |
|---|---|---|
| பொருத்தப்பட்ட 8000 களன் அளவான எரிபொருள் தாங்கியில் இருந்து ரூபா 3,380,000 பெறுமதியான சிலாபம் மற்றும் அம்பலாங்கொடை துறைமுகத்தில் பொருத்தப்பட்ட 02 எரிபொருள் தாங்கிகளுக்காக மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவம் இது வரை நடவடிக்கை எடுக்காமையினால் 2022 மார்ச் 30 ஆம் திகதி வரை பயன்படுத்தப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், சிலாபம் மீன்பிடி துறைமுகத்தில் மின்சார இணைப்பு தற்போது வழங்கப்பட்ட போதும், தற்போது காணப்படுகின்ற எரிபொருள் நெருக்கடியின் காரணமாக எரிபொருள் விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பிபதற்கு வசதியீனமாக இருந்தது. | சொத்துக்களை முழுமையாக பயன்படுத்துவதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் அம்பலாங்கொடை மீன்பிடி முறைமுகத்தில் 40 பேர்ச் அளவான நிலம் 2019 மார்ச் 19 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் பிசின் லைன் நிறுவத்திற்கு 25 வருட கால எல்லைக்காக பணிக்கட்டி (ஐஸ்) உற்பத்திக் கூடமொன்றை நிர்மாணித்து நடாத்திச் செல்வதற்காக மாதாந்தம் ரூபா 126,670 வாடகைத் தொகையும் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், மேற்கூறப்பட்ட வாடகைக்கு வழங்குவதற்காக தேசிய போட்டியாளர் கேள்வி முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. 2019 ஏப்ரல் 04 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட மேற்கூறப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் வாடகை ஆதனங்களுக்காக | 2017 திசெம்பர் மாதம் அனுப்பப்பட்ட செய்திப த்திரிகை அறிவித்தலின் பிரகாரம் தனியார் நிறுவனம் ஒன்றினால் அம்பலாங்கொடை துறைமுகத்தில் அமைந்துள்ள 30 பேர்ச் நில வெற்று நில அளவில் பணிக்கட்டி (ஐஸ்) உற்பத்திக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக வாடகைக்கு வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்ளக மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொண்டதன் பின்னர் 2018 திசெமபர் 06 மற்றும் 2018 திசெம்பர் 11 ஆம் திகதிய அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் உரிய ஆதனங்கள் நீண்ட கால ரீதியில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கை | வாடகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்களுக்காக அரசாங்கத்தின் மதிப்பீடொன்றை பெற்று வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்தின் மதிப்பீடு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு இரு தரப்பினரும் இணங்கியிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையிலும் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 40 பேர்ச் நிலத்திற்காக அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைத்துள்ளதையும் அறியத்தருகின்றோம். | |
| (ஆ) | வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் 40 பேர்ச் காணி 2019 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு தடவை 25 வருட காலத்திற்காக வாடகைக்கு வழங்கல் மற்றும் பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் 30 பேர்ச் அளவு 2029 ஆம் ஆண்டின் 25 வருடங்களுக்காக வாடகைக்கு வழங்கும் போது உத்தேச கோரல் அல்லது தேசிய போட்டியாளர் கேள்வி கோரும் முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | சவுத் லங்கா, நோர்த் ஈஸ்ட் மற்றும் லங்கா ஐஸ் தனியார் நிறுவனம் ஒன்றிணைந்து பணிப்பாளர் சபையின் கீழ் பேணிச் செல்லப்படகின்ற களஞ்சியமாக இருந்ததுடன், அந்த நிறுவனம் நீண்ட காலம் முதல் காலி, பேருவலை மற்றும் வாழைச்சேனை என்ற மீன்பிடி துறைமுகத்தில் நீண்ட காலம் பணிக் கட்டி உற்பத்தி கூடத்தை நடாத்திச் செல்லப்படுவதுடன், அதன் போது உரிய பிரகாரம் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டமையால் உரிய தரப்பினரின் கோரிக்கையை கவனத்தில் கொண்டு கேள்வி சபைக்கு அனுப்பி கேள்வி சபையின் அங்கீகாரத்தின் படி வாடகை உடன்படிக்கையை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆதனங்களை வாடகைக்கு வழங்கும் போது தேசிய போட்டியாளர் கேள்வி முறைமை பின்பற்றப்படல் வேண்டும். |
| (இ) | எரிபொருள் வேகம் நிமிடம் ஒன்றுக்கு 120 - 180 லீட்டருக்கு இடையிலான 10 டீசல் பம்பிகள் ரூபா 30,993,264 தொகையில் கொள்வனவு செய்யும் | 2019 பெப்ரவரி 26 ஆம் திகதி டீஸல் எரிபொருள் பம்பி கொள்வனவு செய்வதற்காக Colombo Machinery and Equipment | கேள்வி நிபந்தனைகள் உள்ளடக்கப்படாத வெளிநாட்டு பயிற்சிகள் தொடர்பான |

கேள்வி கையளித்தலுக்குரிய தொழில்நுட்ப மாதிரிகளை கையளித்தல் உடன்படிக்கை செய்வதற்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், 2019 பெப்ரவரி 26 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டதன் பின்னர் வெளிநாட்டு தொழில்நுட்ப மாதிரிகளை பரீட்சித்தல் மற்றும் பயிற்சிகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் சீனாவிற்கு சென்றிருந்தனர். அது கேள்வி நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் அல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக டிஜிடல் பம்பி வழங்குதல், பொருத்துதல் ஒட்டுமொத்த செயற்பாடுகளிலும் குறித்துரைத்த 120 நாட்களை விஞ்சி மேலும் 06 மாதங்கள் தாமதமடைந்ததுடன், காலத்தை நீடித்து வழங்கும் போது கேள்வி நிபந்தனையின் பிரகாரம் தாமதக் கட்டண பெறுமதி ரூபா 59,391,744 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், இந்த எரிபொருள் பம்பிகளில் எரிபொருள் கசிவு, இரட்டை செயற்பாடுகள் காணப்படாமை உள்ளடக்கிய பல்வேறு தொழில்நுட்ப கோளாருகள் எழுந்திருந்தன. (PVT) Ltd நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன், உரிய வழங்கல்களை பகிர்ந்தலித்தல் மற்றும் பொருத்துவதற்காக 120 நாள் காலம் வழங்கப்பட்டிருந்தது. இந்த 10 எரிபொருள் பம்பிகளும் சீனாவில் இருந்து இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட வேண்டியிருந்ததுடன், இந்த எரிபொருள் பம்பிகள் இறக்குமதி செய்வதற்கு முன்னர் அது தொடர்பாக தொழில்நுட்ப பயிற்சி ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக அந்த நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் சீனாவிற்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தொழில்நுட்ப பயிற்சி மற்றும் வழங்கப்பட்ட மாதிரிகளை பரீட்சித்து அந்த மாதிரிகள் சரியானதாக இருந்தா என உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்ளல் கேள்வி நிபந்தனைகளில் முழுமையான தேவையான இருந்தது. சீன தூதரகத்தில் வீசா அனுமதிப் பத்திரம் வழங்குவதற்காக 04 மாதங்கள் அளவிலான கால தாமதம் ஏற்பட்டிருந்தது. மாதிரிகளை பரீட்சிக்காமல் மற்றும் பயிற்சி இன்றி எரிபொருள் பம்பிகளை கடலில் இடும் கேள்வி நிபந்தனைகளுக்கு முரணாக இருந்தமையால் 10 நீர் பம்பிகள் கொள்வனவு செய்து வழங்குதல் போன்ற ஒட்டுமொத்த செயற்பாடுகளும் பரிசோதனையொன்று மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், தேவையான மாதிரிகளின் பிரகாரம் பொருட்கள் வழங்கப்படாமை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | தாமதமடைந்திருந்தது. அந்த பணிகளை தீர்மானிப்பதற்கு 2020 சனவரி மாதம் 30 வரையிலான கால நீடிப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | பாணந்துறை மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட நிறுவனம் அதில் இருந்து விலகியதன் பின்னர் அது பணிப்பாளர் சபையிலும் அங்கீகாரத்துடன், ஏனைய பெயரில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்திற்கு இலக்கம் CFHC/FD/DPC/2019/6/15 ஆம் இலக்க கேள்வி சபை படிவங்களின் பிரகாரம் அந்த மீன்பிடி துறைமுகத்தில் மணல் அகழ்வு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுகைகளுக்காக கேள்வி தாரர் தகவல்கள் இயலுமை, அனுபவம் போன்ற அத்தியவசிய குறிகாட்டிகளை உள்ளடக்குகின்ற வகையில் முறையான கேள்வி ஆவணங்களை தயாரிப்பதற்கும் கேள்விதாரர்களை முறையான மதிப்பீட்டிற்கு உட்படுத்தலும், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு (TEC) அங்கத்தவர்களினாலும் பெறுகைக் குழு (PC) அங்கத்தவர்களினாலும் தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்புக்களுக்கு கடப்பாடு | RI Developers (pvt) Ltd நிறுவனத்தில் இருந்து அது அறவிடுவதற்குள்ள பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தல் முறிபாட்டு வரைவொன்று வரைவு செய்யப்பட்டிருந்தமையும் அதன் காரணமாக பெறுகைகளை உடனடியாக வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கேள்வி ஆவணங்களை விநியோகிக்கும் போது உரிய நிறுவத்தின் பதிவு செய்த பதிவு சான்றுதழின் பிரதி பெற்று கேள்வி ஆவணங்களில் விநியோகிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் RI Developers (pvt) Ltd நிறுவனம் PV 8109 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், சக்ஸல் நெவுரல் புரடக்ட் நிறுவனம் PV 15011 இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கேள்வி பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | சட்ட ரீதியற்ற வகையில் கேள்வி தாரர்களை தெரிவு செய்தல் தொடர்பாக பொறுப்புக்களை புறக்கணித்த பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அங்கத்தவர்களுக் கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுட ன், நிலுவை பணத்தை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடையவர்கள். அதன் பிரகாரம் முன்னைய மணல் அகழ்வுக்காக உடன்படிக்கை செய்ததன் பின்னர் அந்த உடன்படிக்கையை மீறி ரூபா 16.8 மில்லியன் நிலுவை முற்பண தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காத நிறுவனத்திற்கு மீண்டும் பெறுகைகளை கையளிப்பதற்கு பெறுகைககள் சபை, தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் கவனம் இல்லாமல் நடவடிக்கை எடுத்திருந்ததுடன், தற்போது வரையில் அறவிட வேண்டிய ரூபா 16,894,356 முற்பணம் அறவிடலும் தாமதமடைந்திருந்தது. | | |
| (உ) | இலங்கை துறைமுக கூட்டுத்தாபனத்திற்காக ரூபா 6,689,000 பெறுமதியில் 07 மண்ணெய் பம்பிகள் கொள்வனவு செய்யும் பெறுகை செயற்பாடுகளின் போது கடல் மற்றும கரையேற சுற்றாடலுக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் உறுதிப்படுத்த கூடிய உறுதிப்படுத்த கூடிய எந்தவொரு உறுதிப்படுத்தலும் இல்லாமை மற்றும் பம்பிகளின் வடிவங்கள் மாற்றமடைந்தமை (Pettern) என்ற அடிப்படை புறகக்ணிப்புக்களுடன் கேள்விதாரருக்கு 2019 நவம்பர் 19 ஆம் திகதி பெறுகைகள் கையளிக்கப்பட்டிருந்தது. | Auto Engineering (Pvt) Ltd நிறுவனத்திற்கு கையளித்தல் பத்திரம் 2019 நவம்பர் 05 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட போதும் உடன்படிக்கை சனவரி 07 ஆம் திகதி செய்யப்பட்டிருந்தது. அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட கொவிட் தொற்று நோயின் காரணமாக எரிபொருள் பம்பிகள் பொருத்துதல் தாமதமடைந்திருந்தது. அவ்வாறே ஒப்பந்த காரருடன் கைச்சாத்திடுகின்ற உடன்படிக்கை தாமதக் கட்டணத்தை அறவிடல் தொடர்பான பொறுப்பொன்றை உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் செயல் நடைமுறைகளை பின்பற்றி பொருட்களை கொள்வனவு செய்தல் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், அதற்கு முரணாக மேற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | தொழில்நுட்ப மாதிரிகளின் பிரகாரம் எரிபொருள் பம்பிகளின் வேகம் ஒரு நிமிடத்திற்கு 150 லீட்டர் | உரிய நிறுவனத்தால் கொட்பே, திக்கோவிட்ட, காலி, மிரிஸ்ஸ, பேருவளை, புராணவெல்ல, | மாதிரிகளுக்கு இணங்காத எரிபொருள் பம்பிகளின் |

| | | |
|---|---|---|
| ஆக இருக்க வேண்டிய போதிலும், கடற் தொழில் துறைமுகத்திற்கு வழங்கப்படுகின்ற எரிபொருள் பம்பிகளின் வேகம் நிமிடம் ஒன்றுக்கு 138 லீட்டர் ஆக இருந்ததுடன், மீன்பிடி துறைமுகங்களில் ஸ்தாபிக்கப்பட்ட 08 எரிபொருள் பம்பிகள் 2019 மார்ச் 11 ஆம் திகதி வரையிலும், பயன்படுத்தாமையின் காரணமாக வழங்குனருக்கு செலுத்தப்பட்ட ரூபா 3,824,200 தொகை பயனற்ற செலவினமாகவும் இருந்தது. மேலும், இனங்கப்பட்ட பிரகாரம் பொருள் வழங்கப்படாத பொருட்கள் மற்றும் தேவைக்கு ஈடுகொடுக்காத எரிபொருள் பம்பிகள் வழங்கல் தொடர்பாக வழங்குனருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குடாவெல்ல, அம்பலாங்கொடை என்ற துறைமுகங்களில் 08 பம்பிகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் அந்த பம்பிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்திற்கான முற்பண தொகை மாத்திரம் செலுத்தப்பட் போதும், இது வரை எந்தவொரு தொகையும் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை . ஆதன் பிரகாரம் உரிய பம்பிகளின் பெறுமதி முற்பணத் தொகையை விஞ்சியிருந்ததை அறியத்தருகின்றோம். | கொடுப்பனவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் இணங்கப்பட்ட பிரகாரம் பொருள் வழங்காமை தொடர்பாக வழங்குனருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2012 சனவரி 17 ஆம் திகதிய CFHC/HR/Permanent ஆம் இலக்க நியமனக் கடிதத்தின் பிரகாரம் மாதாந்த சம்பளமாக ரூபா 37,405 தொகை ஸ்தாபிக்கப்பட்ட தலைவர் செயலாளர் பதவிக்கு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்துடன், இந்த பதவிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | 2022 பெப்ரவரி மாதம் முதல் சரியான படி முறையில் ஸ்டதாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படடுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றதன் பின்னர் பதவிக்காக மாத்திரம் நியமித்தல் வேண்டும். இது சட்ட விரோத நியமனமாக கருதி செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் பிரதி பொது முகாமையாளர் செயற்பாடுகள் (01), அங்கீகரிக்கப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக அந்த பதவிகளுக்காகவும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி 2014 செப்டம்பர் 02 ஆம் திகதி முதல் 2016 ஆகஸ்ட் வரை மேலும் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு ரூபா 1,622,000 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. | 2014 செப்டம்பர் மாதம் முன்னால் கூட்டுத்தாபன நிர்வாக அதிகாரியினால் பணிப்பாளர் சபை பத்திரம் மூலம் மேலும் பிரதி பொது முகாமையாளருக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியின் பிரகாரம் ஒரு பிரதி பொது முகாமையாளர் பதவி மாத்திரமாக இருந்தமையால் அதனை திருத்துவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதா என வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. தற்போது அந்த நபர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த பதவிகளுக்காக மாத்திரம் நியமித்தல் வேண்டும். இது சட்ட விரோத நியமனமாக கருதி செயற்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை மீன்பிடி துறைமுகத்தின் 16 பதவிகளுக்குரிய தகைமைகளுடன் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்காமல் பதிற்கடமையில் பணிகளை நிறைவேற்றி நிறுவனத்தின் நடவடிக்கைகள் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | பதவிகளுக்குரிய பதிற்கடமை தொடர்பாக விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடப் பதவிகளுக்காக நிரந்தர ஊழியர்கள் சேர்க்கப்படல் வேண்டும். |